**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**முன்னிலை : - திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 30 ம் நாள்

**இடைநிலை மனு எண். 207/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 71/2022**

முருகேசன் ..... மனுதாரர்/1 வது எதிர்வாதி

**// எதிர்//**

1. வடிவேல்
2. சார்பதிவாளர், உள்ளிக்கோட்டை
3. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர்,
   திருவாரூர். ...... எதிர்மனுதாரர்கள்/2, 3 எதிர்வாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரர் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் பெயரில் கடந்த 16.12.2022 ம் தேதியில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவின் சுருக்கம்</u>** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1வது எதிர்வாதி ஆவார். வாதி மனுதாரர் சகோதரர் ஆவார். மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து மனுதாரர்களது குடும்ப பூர்வீக சொத்தாகும். மனுதாரர்களது தகப்பனாருக்கு பிறகு வழக்கு சொத்தை பொறுத்து மனுதாரர்களுக்குள் கடந்த 1990 ம் வருடத்தில் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி வழக்கு சொத்து புல எண்ணில் உள்ள வடபாகம் மனுதாரருக்கும், அதற்கு அடுத்த தென்பாகம் வாதிக்கும், அதற்கு அடுத்த தென்பாகம் மனுதாரரது மற்றொரு சகோதரரான துரை என்பவருக்கும் பாகவீதமாக ஒதுக்கப்பட்டு அவரவர் பாகவீது சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள்.

அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 16.12.2022 ம் தேதியில் வழக்கு விசாரணைக்கு போடப்பட்டு இருந்துள்ளது. அப்போது மனுதாரருக்கு மஞ்சல்காமாலையும், அதனால் வைரஸ் காய்ச்சலும் ஏற்பட்டு, நாட்டு வைத்தியம் செய்து கொண்டு வெளியில் நடமாட இயலாமல் வீட்டிலேயே இருந்துள்ளார். அதனால் மனுதாரரால் நீதிமன்றத்திற்கு வரவோ, வழக்கறிஞருக்கு தகவல் சொல்லவோ எதிர்வழக்குரை தாக்கல் செய்யவோ இயலவில்லை. அதன் காரணமாக மேற்படி தேதியில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவாகியுள்ளது.

மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. வழக்கை நடத்த தயாராக உள்ளார். இம்மனுவுடன் மனுதாரர் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். எனவே 16.12.2022 ம் தேதியில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :-

மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் உண்மை நிலவரப்படிக்கும், நிலைநிற்க கூடியதல்ல. குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் இந்த மனுவினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்திலும், இந்த எதிர்மனுதாரருக்கு வீண் மன உளைச்சலை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள விபரங்களை நிரூபணம் செய்ய யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வாதிகளுக்கு வீண் மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டும் என்றும் ஏதோ ஒரு மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து சிகிச்சை மேற்கொண்டதற்கான எந்த ஒரு ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் பொய்யான விவரங்களை கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளார். மேலும் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கில் மனுதாரர் இந்த மனு கொடுத்திருப்பது சட்டப்படி நிலை நிற்கதக்கதல்ல என்றும், வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் செயல்பட்டுவிட்டு இதுபோன்றதொரு மனு கொடுத்திருப்பது எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தையே காட்டுவதாக உள்ளது. எதிர்மனுதாரருக்கு யாதொரு நீதியின் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு தொல்லை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரரால் இந்த

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினாலும், மனுதாரர் கரைபடிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ள காரணத்தினால் இந்த மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரரால் இந்த எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5. <u>தீர்வு</u> :-

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது தாவா சொத்தில் சட்ட அனுமதியில்லாமல் 1ம் பிரதிவாதியோ அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ, முகவர்களோ, சட்ட விரோதமாக எவ்வித வில்லங்கங்களும் யாதொரு பாராதீன ஆவணங்களும் 2ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் ஏற்படுத்தக்கூடாது என்று ஓர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 16.12.2022ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

**4.** மனுதாரர்/1வது எதிர்வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு கடந்த 16.12.2022ம் தேதியன்று மனுதாரருக்கு மஞ்சல் காமாலையும், அதனால் வைரஸ் காய்ச்சலும் ஏற்பட்டு நாட்டு வைத்தியம் செய்து கொண்டு வெளியில் நடமாட முடியாத காரணத்தினால் மனுதாரர் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரை பொறுத்து

எதிரவரில்லா உத்தரவு பிறபிக்கப்பட்டு பின்பு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்நீதிமன்றம் கவனமாக கருத்தில் கொள்கிறது.

**5.** மனுதாரர்/வாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடுவதால், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை என்றாலும் கூட இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மனுதாரர் அவரது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நீதியின் நலன் கருதி இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6. முடிவில்,** மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ கடந்த 19.11.2024 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 19.11.2024.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (16.11.2024) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி.

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)

மாவட்ட உரிமையியல் நீதிபதி

மன்னார்குடி.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 30 ம் நாள்

**இடைநிலை மனு எண். 207/2024 -ல்**

**அசல் வழக்கு எண். 71/2022**

திரு.முருகேசன், வயது 58, த/பெ.ராசு, வசிப்பிடம் சன்னதி தெரு, பைங்காநாடு கிராமம், மன்னார்குடி தாலுக்கா.

.... மனுதாரர்/1 வது எதிர்வாதி

// எதிர்//

1. திரு.வடிவேல், வயது 62, த/பெ.ராசு, வசிப்பிடம் தெற்கு தெரு, பைங்காநாடு கிராமம், மன்னார்குடி தாலுக்கா.
2. சார்பதிவாளர் அவர்கள், சார்பதிவாளர் அலுவலகம், உள்ளிக்கோட்டை, மன்னார்குடி தாலுக்கா.
3. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர்.

.... எதிர்மனுதாரர்கள்/2, 3 எதிர்வாதிகள்

இம்மனுவில் மனுதாரர் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் பெயரில் கடந்த 16.12.2022 ம் தேதியில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 22.04.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 19.06.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில்

வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ கடந்த 19.11.2024 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சம் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 19.11.2024.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 19.11.2024.

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் கார்த்திகைத்திங்கள் 02 ம் நாள்

**இடைநிலை மனு எண். 207/2024-ல்**

**அசல் வழக்கு எண். 71/2022**

திரு.முருகேசன், வயது 58, த/பெ.ராசு, வசிப்பிடம் சன்னதி தெரு, பைங்காநாடு கிராமம், மன்னார்குடி தாலுக்கா.

.... மனுதாரர்/1 வது எதிர்வாதி

// எதிர்//

1. திரு.வடிவேல், வயது 62, த/பெ.ராசு, வசிப்பிடம் தெற்கு தெரு, பைங்காநாடு கிராமம், மன்னார்குடி தாலுக்கா.
2. சார்பதிவாளர் அவர்கள், சார்பதிவாளர் அலுவலகம், உள்ளிக்கோட்டை, மன்னார்குடி தாலுக்கா.
3. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர்.

.... எதிர்மனுதாரர்கள்/2, 3 எதிர்வாதிகள்

இம்மனுவில் மனுதாரர் எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் பெயரில் கடந்த 16.12.2022 ம் தேதியில் ஏற்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 22.04.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 19.06.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில்

வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. செலவுத்தொகை செலுத்தப்பட்டது.

02. மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.